## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 7660/2019/ எம்.சி. 8** |
| **நாள்** | - | **20.08.2019 காலை 11.00 மணி** |
| **தலைமை** | - | **திரு.ஜெ.ஷ்ரவன்குமார், இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

---

**பொருள் எண் 1**

பொருள் :– கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் – (SJSRY) NULM திட்டத்தில் சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு செய்தல் – தொடர்பாக.

பார்வை :– கூடுதல் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடித எண்.31371/2008/UPA-2 நாள்.28.08.2014.

**********

பார்வை 1ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதத்தின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி 100 வார்டுகளில் உள்ள சாலையோர வியாபாரிகளை கண்டறிந்து, கணக்கெடுப்பு செய்து, அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கி, அவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்த பயிற்சி வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து முதற்கட்டமாக கோயம்புத்தூர் மாநகராட்சி 100 வார்டுகளில் 6169 சாலையோர வியாபாரிகளை கண்டறியப்பட்டு, அவர்களை கணக்கெடுப்பு செய்யப்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை 2016 முதல் 2018 டிசம்பர் வரை 3 வருடங்களுக்கு வகையில் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அடையாள அட்டை புதுப்பிக்கவும், அடையாள அட்டை வழங்கவும், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கணக்கெடுக்கப்பட்ட நடைபாதை வியாபாரிகளுக்கு பயோமெட்ரிக் தகவல்களுடன் கூடிய அடையாள அட்டை வழங்க கணக்கு எடுக்கப்பட்ட நடைபாதை வியாபாரிகளை கோயம்புத்தூர் மாநகராட்சி மைய அலுவலகத்திற்கு வரவழைத்து அவர்களின் தகவல்கள் மற்றும் பயோமெட்ரிக் தகவல்களை சேகரிக்க வேண்டியுள்ளது. மேலும் சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கு நபர் ஒன்றுக்கு ரூ.190/– வீதம் விலைப்புள்ளி பெறப்பட்டு அடையாள அட்டை 2016ல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது 6169 சாலையோர வியாபாரிகளுக்கு நபர் ஒன்றுக்கு தோராயமாக ரூ.250/– வீதம் (ரூ.15,49,000) குறைந்த விலைப்புள்ளி கோரும் நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கவும், NULM திட்டத்தில் உள்ள SUSV இனத்தில் சில்லரை செலவினம் செய்யவும் அனுமதி, உத்தரவும் வேண்டியும், மற்றும் மின்னணு அடையாள அட்டையில் (Smart Identify card) ஆணையாளர் அவர்களின் கையொப்பத்துடன் கூடிய Digital Signature உபயோகப்படுத்துவதற்கும் மேற்காண் பொருள் தொடர்பாக அனுமதி அளிக்கவும், மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க. எண். 9985 /2013/எம் இ 6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 141 நாள் 28.08.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 2**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்:36க்கு உட்பட்ட கொடிசியா-சித்ரா இணைப்பு சாலையில் கழிவுநீா தேங்கி வெளியேறாத சூழ்நிலை உள்ளது. இதனால் சுகாதாரகேடு ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு 1 மீட்டர் விட்டமுள்ள RCC குழாய் அமைத்து கழிவுநீரை அருகில் உள்ள பள்ளத்தில் வெளியேற்ற மதீப்பீடு ரூ.26.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 6891/2019/எம்டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 142 நாள் 28.08.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

பொருள்: சமுதாயக்கூடம் – கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் – வார்டு எண்.92ல் சுகுணாபுரம்கிழக்கு, செந்தமிழ்நகரில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்திற்கு நாள் வாடகை நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டுக்கு விடுவது தொடர்பாக.

பார்வை 1: இளம் பொறியாளர் அவர்களின் குறிப்பு . நாள்.02.07.2019
2: ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.31.07.2019

******

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 92 சுகுணாபுரம் கிழக்கு பகுதி செந்தமிழ் நகரில் 4722 சதுரடி அளவில் ரூ.97.80 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடம் மக்கள் பயன்படுத்த தயார் நிலையில் உள்ளதாகவும் இதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.3454/– வாடகை நிர்ணயம் செய்யலாம் என இளம் பொறியாளர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இளம் பொறியாளரின் குறிப்பின்படி சமுதாயக் கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி மாமன்றப் பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

சுகுணாபுரம் கிழக்கு , செந்தமிழ் நகர் பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியிலுள்ள பொது மக்கள் மிகவும் வறுமை கோட்டின்கீழ் உள்ளவர்களாக உள்ளதால் அவர்கள் பயன் பெறும் வகையில் இந்த சமுதாய கூடம் கட்டப்பட்டுள்ளதாகவும் அதற்காக மிக குறைந்த வாடகையாக நாள் ஒன்றுக்கு ரூ. 1000/-ம் மற்றும் முன்பண வைப்புத் தொகையாக ரூ. 2500/-ம் நிர்ணயம் செய்யுமாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டம் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் வாய்மொழி உத்தரவுபடி வாடகை மற்றும் முன்பண தொகை நிர்ணயம் செய்ய தீர்மானிக்கலாம்.

ந.க.எண்.4767/2019/டி1(தெ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 143 நாள் 28.08.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 17 குட்பட்ட பகுதியில் I.O.B காலனி மாநகராட்சி ஆரம்ப பள்ளிக்கு நடைபாதை, மின்சார உபகரணங்கள், தீ அணைப்பு கருவி மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு கருவி வழங்குதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 17 க்கு உட்பட்ட I.O.B காலனி மாநகராட்சி ஆரம்ப பள்ளிக்கு நடைபாதை, மின்சார உபகரணங்கள், தீ அணைப்பு கருவி மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு கருவி வழங்குதல். (ந.க.எண். 6977 /2019/எம்.டி2) | 13.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 6977 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 144 நாள் 28.08.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 17 குட்பட்ட பகுதிகளில் வள்ளலார் நகர் பகுதியில் கைப்பந்து உள்விளையாட்டு அரங்கம் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 17 க்கு உட்பட்ட வள்ளலார் நகர் பகுதியில் கைப்பந்து உள்விளையாட்டு அரங்கம் அமைத்தல். (ந.க.எண் 6980 /2019/எம்.டி2) | 48.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 6980 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 145 நாள் 28.08.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

**பொருள்:** நில உரிமை மாற்றம் **–** கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் தெற்கு வட்டம் **–** உக்கடம் லேக் வியூ – நகரளவு வார்டு எண். C (3), பிளாக் எண்.**25** – T.S.No.1905/9 pt3, 1905/9 pt4, 1905/10, 1905/11 pt **– 0.8817** ஹெக்டேர் மாநகராட்சி நிலம் **–** ‘‘பிரதம மந்திரியின் வீட்டு வசதி திட்டம் **–** அனைவருக்கும் வீடு’’ (PMAY – HFA) – திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டுதல் – நில உரிமை மாற்றம் கோரியது – தொடர்பாக.

**பார்வை:** நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோயம்புத்தூர் கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.**2137**/LA/**2019**, நாள்.**05.22.2019.**

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர் தெற்கு வட்டம் எல்லைக்குட்பட்ட நகரளவு வார்டு எண். C (3), பிளாக் எண்.**25** உக்கடம் லேக் வியூ திட்டப்பகுதியில் T.S.No.1905/9 pt3, 1905/9 pt4, 1905/10, 1905/11 ptல் அமையும் **0.8817** ஹெக்டேர் பரப்பளவு கொண்ட மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதாவும், இத்திட்டப்பகுதியில் கட்டப்படும் குடியிருப்புகள் உக்கடம் லேக் வியூ பகுதிக்கு அருகாமையிலுள்ள மாநகராட்சியின் துப்புரவு பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யவுள்ளதாவும் பார்வையில் காண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **வட்டம்** | **நகர நில அளவை எண்கள்** | **பில உரிமை மாற்றம் செய்ய கோரும் இடத்தின் பரப்பளவு ஹெக்டேரில்** |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 1905/9 pt3 | 0.3829 |
| 2 | தெற்கு | 1905/9 pt4 | 0.1052 |
| 3 | | 1905/10 | 0.0709 |
| 4 | | 1905/11 pt | 0.3227 |
| 5 | | | **0.8817** |

மேலும், தற்போது மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள் குடியிருக்கும் இடம் நெடுஞ்சாலைத் துறையின் உக்கடம் மேம்பாலம் மற்றும் சாலைப் பணிகளுக்கு தேவைப்படுவதால் இவர்களை காலி செய்து மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரதம மந்திரியின் ‘‘அனைவருக்கும் வீடு’’ திட்டத்தின் கீழ் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி குடியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோயம்புத்தூர் கோட்டம் கேட்டுக்கொண்டதன் படி, மேற்படி மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் பிரதம மந்திரியின் ‘‘அனைவருக்கும் வீடு’’ (PMAY – HFA) திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யவும், அவசர அவசியத்தினை முன்னிட்டு கட்டுமான பணிகளை துவங்கும் பொருட்டு முன்நுழைவு அனுமதி வழங்கவும் அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.**766**/**2019**/எச்**1**(ம)/எம்.எச்.**5.**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 146 நாள் 28.08.2019</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 7**

கோயம்புத்துார் மாநகராட்சி நகரமைப்பு பிரிவில் கட்டிட அனுமதி மற்றும் கட்டிட வரைபட அனுமதி கணிணி மயமாக்கப்பட்டு, Tamilnadu Tender Transparency Act 1998 ன்படி Auto DCR மென்பொருள் தி/வா.சாப்ட் டெக் இன்ஜினியர்ஸ் (பி) லிட்., மூலமாக 2010 நவம்பர் முதல் இணையதளத்தின் வழியாக கட்டிட அனுமதி விண்ணப்பம் பெறப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு வருடாந்திர பராமரிப்பு தொகையாக மென்பொருள் தொகையிலிருந்து 10 சதவீதமும், அயலாக்கத்திற்கான கட்டணம் (Outsourcing charges) வருடத்திற்கு ரூ.5,76,000/–ம் வழங்கப்பட்டும், இதனைத் தொடர்ந்த மாமன்ற தீர்மானம் எண்.179, நாள்.07.08.2014ன்படி, அயலாக்கக் கட்டணம் (Outsourcing charges) 01.04.2014 முதல் 15 சதவீதம் உயர்வு செய்து வருடத்திற்கு ரூ.6,62,400/– தொகை வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது, தி/ள்.Soft Tech Engineers (Pub) Ltd., Pune நிறுவனம், அயலாக்கத்திற்கான கட்டணத்தை (Outsourcing charges) ரூ.9,60,000/– ஆக உயர்த்தி தரக் கோரியுள்ளனர். மேற்படி நிறுவனத்திற்கு அயலாக்க கட்டணம் (Outsourcing charges) 01.04.2014 முதல் உயர்வு செய்து வழங்கி 5 ஆண்டுகள் முடிவடைந்துள்ளதால், 20 சதவீதம் உயர்த்தி வருடாந்திர அயலாக்க கட்டணமாக (Outsourcing Charges) ரூ.7,94,880/– தொகையினை வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.5049/2010/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 147 நாள் 28.08.2019**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 8**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 16 குட்பட்ட பகுதியில் மருதமலை பிரதான சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்16 க்கு உட்பட்ட மருதமலை பிரதான சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல். (ந.க.எண். 6978 /2019/எம்.டி2) | 65.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 6978 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 148 நாள் 28.08.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி- வடக்கு–மண்டலம் – வார்டு எண் 27 க்குட்பட்ட சின்னமேட்டுப்பாளையம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் தலைமையாசிரியரின் கோரிக்கையின் அடிப்படையில் தி/ள்.சுரேந்திரன் சௌமியா நினைவு அறக்கட்டளை மூலம் புதிய உணவு உண்ணும் அறை கட்டுவதற்கும் மற்றும் சோலார் மின் விளக்குகள்அமைப்பதற்கும் மாநகராட்சி கல்வி பிரிவின் மூலம் **25.06.2019** அன்று ஆணையாளரிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.மேற்குறிப்பிட்ட பணியினை பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்வதற்கு உத்திரவு பெறப்பட்டுள்ளது.

எனவே, சின்னமேட்டுப்பாளையம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிய உணவு உண்ணும்அறை கட்டுவதற்கும் மற்றும் சோலார் மின் விளக்குகள்அமைப்பதற்கு தி/ள்.சுரேந்திரன் சௌமியா நினைவு அறக்கட்டளை மூலம் பணியினை மேற்கொள்வதற்கு பணி உத்திரவு வழங்க கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1. புதிதாக கட்டப்படும் கட்டிடம் கட்டி முடித்தபின் மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.
2. புதிதாக கட்டப்படும் கட்டிடத்தில் தங்களது நிறுவனத்தின் பெயர் பொறிக்கக்கூடாது.
3. புதிதாக கட்டப்படும் கட்டிடத்திற்கு மண் பரிசோதனை (soil test) செய்து சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. புதிதாக கட்டப்படும் கட்டிடத்திற்கு கட்டிட வடிவமைப்பு (structural design) பெற்று பணி மேற்கொள்ள வேண்டும்.
5. மேற்கண்ட புதிதாக கட்டப்படும் கட்டுமான பணிகள் அனைத்தும் மாநகராட்சி பொறியாளர் அவர்களின் மேற்பார்வையில் மேற்க்கொள்ளப்பட வேண்டும்.
6. புதிய கட்டிடம் கட்டுவதற்கான செலவுத்தொகையை முழுவதும் தனது செலவில் மேற்கொள்ளப்பட்ட வேண்டும். மாநகராட்சி நிதியிலிருந்து எந்த தொகையும் வழங்கப்படமாட்டாது.
7. பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே உள்ள கட்டிடங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தக்கூடாது. அவ்வாறு ஏற்பட்டால் மனுதாரர் தனது சொந்த செலவில் சரி செய்து கொடுக்க வேண்டும்.
8. பொது மக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு பணியினை மேற்கொள்ள வேண்டும்.
9. கூடுதல் வகுப்பறைக் கட்டடப்பணிகள் துவங்கிய தினத்திலிருந்து 4 மாதங்களுக்குள் முழுமையாக பணி நிறைவு செய்து மாணவ, மாணவிகள் பயன்பாட்டில் இருக்க வேண்டும்.
10. உணவு உண்ணும் அறை கட்டிடத்தின் Plan Sheets, Structural Design Details 3 Sheets, Reinforcement Detail Sheet ஆகியவை மாநகராட்சி பொறியாளரின் மேற்பார்வையின்படி எவ்வித மாற்றம் இன்றி பின்பற்ற வேண்டும்.
11. அரசால் அனுமதி அளிக்கப்பட்ட ஆய்வகங்களில் கண்டிப்பாக கட்டடப் பணிக்கான இடத்தின் மண் தன்மை குறித்த மண் பரிசோதனை செய்து சான்று பெற்று பள்ளியில் வைத்திருக்க வேண்டும்.
12. அனைத்து கட்டிட பணிகளுக்கும் பயன்படுத்தப்படும் கட்டிடப் பொருட்கள் தர பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதற்கான பதிவேட்டில் பதியப்பட வேண்டும்.
13. கட்டடத்தின் வரைப்படத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
14. கட்டுமானப்பணி எந்தவொரு ஒப்பந்த அடிப்படையிலும் மேற்க்கொள்ளக்கூடாது.
15. அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்.
16. புதிய கட்டடங்கள் அனைத்திலும் தீயணைப்பான் (Fire Extinguisher) பொருத்தப்பட வேண்டும். (ஒரு கட்டடத்திற்கு ஒரு தீயணைப்பான் )
17. அனைத்து பொருட்களும் ISI முத்திரையுடன் கூடிய பொருட்களாக இருக்க வேண்டும்.
18. கட்டுமான பணிகள் நடைபெறும் போது ஒவ்வொரு நிலையிலும் புகைப்படம் எடுக்கப்பட்டு பணி முடிவடைந்தவுடன் புகைப்படத் தொகுப்பு மற்றும் பயனீட்டு சான்றிதழ் ஆகியவற்றை மாநகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
19. உணவுக்கூடம் கட்டடப்பணி சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரால் சுட்டிக் காட்டப்படும் இடத்தில் தான் கட்டப்படும். மேலும் கட்டிடம் கட்டும் இடத்தில் இடம் சம்பந்தமான பிரச்சனை ஏதும் இருந்தால் அதற்கு முழுப் பொறுப்பும் தலைமையாசிரியரையே சாரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.
20. பணிநிறைவு செய்த பின்னர் அப்பணிக்கான புகைப்படத்துடன் கூடிய பயனீட்டுச் சான்றிதழை (Utilization Certificate) மாநகர பொறியாளரிடம் ஒப்புதல் பெற்று ஆணையாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் :5619/2019/K5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 149 நாள் 28.08.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 17 குட்பட்ட பகுதியில் பொம்மணம்பாளையம் எரிவாயு மயனாத்திற்கு கூடுதல் பணிகள் செய்தல் போன்ற பணிக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்கள் 17 க்குட்பட்ட பொம்மணம்பாளையம் எரிவாயு மயனாத்திற்கு கூடுதல் பணி செய்தல். **(ந.க.எண்.6979 /2019/எம்.டி2)** | 75.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.6979 /2019/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 150 நாள் 28.08.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண்-11

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 16, 17 , 18 & 19 குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சி பள்ளிகளுக்கு மராமத்து பணிகள் செய்தல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு **:**

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| **1** | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 16, 17, 18 & 19 க்கு உட்பட்ட பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளிகளுக்கு மராமத்து பணிகள் செய்தல். (ந.க.எண். 7065/2019/எம்.டி2) | **5.90** |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 7065/2019/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 151 நாள் 28.08.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலத்திற்க்குட்பட்ட வார்டு பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் மற்றும் கிணற்று நீர் பகிர்மான குழாய் பொருத்துதல் பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 35 | வார்டு எண் 35-க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளுக்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் மற்றும் கிணற்று நீர் விநியோகம் செய்தல் பணிக்கு ந.க.எண்:- 7263 /2019/எம்டி3 | 2.50 |
| 2 | 36 | வார்டு எண் 36-க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளுக்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் மற்றும் கிணற்று நீர் விநியோகம் செய்தல் பணிக்கு ந.க.எண்:- 7264 /2019/எம்டி3 | 2.50 |
| 3 | 37 | வார்டு எண் 37-க்குட்பட்ட கணேஷ் நகர் பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி மற்றும் ஜீவா வீதி, என்.ஜி.ஆர் வீதி பழுதடைந்த மோட்டார்களை மாற்றி அமைத்தல் பணிக்கு.ந.க.எண்:- 7265 /2019/எம்டி3 | 5.00 |
| 4 | 58 | வார்டு எண் 58-க்குட்பட்ட இந்திரா நகர், அண்ணா நகர் மற்றும் வார்டு பகுதிகளில் ஆழ்துளை கிணறு துளையிடுதல் மற்றும் கிணற்று நீர் விநியோகிக்க குழாய் பதித்தல் பணிக்கு ந.க.எண்:- 7266 /2019/எம்டி3 | 5.00 |
| 5 | 59 | வார்டு எண் 59-க்குட்பட்ட மூகாம்பிகை நகர், எஸ்.ஐ.எச்.எஸ் காலனி வார்டு பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் பணிக்கு ந.க.எண்:- 7267 /2019/எம்டி3 | 5.00 |
| 6 | 60 | வார்டு எண் 60-க்குட்பட்ட கொக்காளி தோட்டம் பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணிக்கு ந.க.எண்:- 7268 /2019/எம்டி3 | 2.50 |
| 7 | 61 | வார்டு எண் 61-க்குட்பட்ட எக்ஸ்டன்சன் வீதி, கஸ்தூரி நகர் மற்றும் அஸ்தாந்திர நாயக்கர் வீதி பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் பணிக்கு ந.க.எண்:- 7269 /2019/எம்டி3 | 8.00 |
| 8 | 62 | வார்டு எண் 62-க்குட்பட்ட ஐயர் லே அவுட், குமரன் வீதி, தனபால் லே அவுட் மற்றும் வார்டு பகுதிகளில் கிணற்று நீர் விநியோகிக்க குழாய் பதித்தல் பணிக்கு மற்றும் பழுதடைந்த ஆழ்குழாய் கிணற்று நீர் மோட்டார்களை மாற்றி அமைத்தல் பணிக்கு ந.க.எண்:- 7270 /2019/எம்டி3 | 2.00 |
| 9 | 63 | வார்டு எண் 63-க்குட்பட்ட நஞ்சப்பா நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் பணிக்கு ந.க.எண்:- 7271 /2019/எம்டி3 | 2.00 |
| 10 | 65 | வார்டு எண் 65-க்குட்பட்ட இந்திரா நகர், பழனியப்பா நகர், இந்திரா நகர் கழிப்பிடம் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறு துளையிடுதல் மற்றும் கிணற்று நீர் விநியோகிக்க குழாய் பதித்தல் பணிக்கு ந.க.எண்:- 7272 /2019/எம்டி3 | 5.00 |
| 11 | 66 | வார்டு எண் 66-க்குட்பட்ட மேற்கு விநாயகர் கோவில் வீதி கிணற்றுக்கு அபிவிருத்தி பணி செய்தல் மற்றும் கிணற்று நீர் விநியோகிக்க குழாய் பதித்தல் பணிக்கு ந.க.எண்:- 7273 /2019/எம்டி3 | 2.00 |
| 12 | 75 | வார்டு எண் 75-க்குட்பட்ட ராஜீவ் நகர் பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்தல் மற்றும் நஞ்சுண்டாபுரம் பகுதியில் காமராஜர் நகர் மற்றும் மாரியம்மன் கோவில் வீதி பகுதியில் கிணற்று நீர் மேல்நிலைத் நீர்தேக்கத்தொட்டி பராமரிப்பு செய்தல் பணிக்கு ந.க.எண்:- 7274 /2019/எம்டி3 | 8.00 |
| | | மொத்தம் | 49.50 |

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:- 7263 /2019/எம்டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 152 நாள் 28.08.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரம் - துப்புரவு பணியாளர்களுக்கு 2019-20ம் ஆண்டிற்கான சீருடைகள் வாங்கி வழங்குதல் - தொடர்பாக.

--------

அரசாணை எண் (2டி) எண் 37 நாள் 14.05.1999 நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்குதுறை உத்தரவுப்படி கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவுபணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும், ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகளும், ஒரு ஜோடி காலணியும், ஒரு தலைப்பாகையும், பெண் துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு பாலிஸ்டர் புடவையும், இரண்டு ஜாக்கெட்டுகளும், 1 ஜோடி காலணியும் மற்றும் ஒரு தலைப்பாகை துணியும் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஜோடி சீருடை தீபாவளிப்பண்டிகைக்கும் மற்றொரு ஜோடி சீருடை பொங்கல் பண்டிகையின் போதும் வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை (வாலாயம்) எண் 393 நாள் 16.09.1997 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந.2) உத்தரவுப்படி, மலேரியா ஒழிப்புத்திட்ட பணியாளர்களுக்கு 2 ஜோடி முழுக்கால் சட்டை, 2 ஜோடி அரைக்கை சட்டை, காலணி ஆகியன வழங்கப்பட்டு வருகிறது.

மாமன்ற தீர்மான எண் 87, நாள் 30.09.2009.-ன்படி அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும் முழுக்கால் சட்டை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண் 50 கைத்தறி, காதி (டி4) டிபார்ட்மெண்ட் நாள் 10.03.1995ன்படி அரசுத்துறை நிறுவனங்களான கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ், தேசிய பஞ்சாலைக்கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து இவ்வகை சீருடைகள் நேரிடையாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அரசாணையின்படி ஆண்துப்புரவு பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு தையற்கூலி ரூ.100/-, பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட் தையற்கூலி ரூ. 20-ம் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. மாமன்ற தீர்மான எண் 87, நாள் 30.09.2009ன்படி ஆண் பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு தையற்கூலி ரூ. 200-ம் மற்றும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட் தையற்கூலி ரூ. 40-ம் வழங்க தீர்மானிக்கப்பட்டு இதுவரை வழங்கப்பட்டுள்ளது. சுகாதாரநிலைக்குழு தீர்மான எண் 33 நாள் 10.10.2013-ன்படி ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு தையற்கூலி ரூ.450/- மற்றும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.100/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

சென்ற 2018-19-ம் ஆண்டு தையற்கூலி செலவினம் ரூ.16,41,500/-யும், சீருடைகள் வாங்கி வழங்க ரூ. 28,29,092/-யும் மற்றும் காலணிகளுக்கு ரூ. 5,99,570/-யும் ஆகமொத்தம் ரூ. 50,70,162/- செலவாகியுள்ளது.

இவ்வாண்டு சீருடைகள் வாங்குவதற்கு ரூ. 70.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அனைத்து மண்டல துப்புரவு அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பட்டியலின்படி மாநகராட்சியில் தற்போது பணிபுரியும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மொத்தம் **2397** நபர்களுக்கு 2019-20-ம் ஆண்டிற்கு 2 ஜோடி சீருடைகள்,தையற்கூலி, தலைப்பாகை மற்றும் காலணிகளை அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்து ரூ. 70.00 இலட்சத்திற்குள் வாங்கி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அதன்படி 18.06.2019-ம் தேதிய இவ்வலுவலகக்கடிதம் வாயிலாக **அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்து** விலைப்புள்ளிகள் மற்றும் மாதிரிகள் கோரப்பட்டது. கோ ஆப்டெக்ஸ், தேசிய பஞ்சாலைக்கழகம் (NTC) மற்றும் காதி கிராப்ட் (கதர் கிராமத் தொழில்கள் ) ஆகிய நிறுவனத்தார் தங்களின் கடிதங்களின் வாயிலாக மாதிரிகள் மற்றும் விலைப்புள்ளிகளை சமர்ப்பித்துள்ளனர். இதனடிப்படையில் சீருடைகளுக்கான உத்தேச செலவினத்தொகை கணக்கீடு செய்யப்பட்டது. அதன் விவரங்கள் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **துணி வகை** | **கோஆப்டெக்ஸ் நிறுவனம்** | **என்.டி.சி நிறுவனம்** | **காதி கிராப்ட் நிறுவனம்** |
|---|---|---|---|---|
| 1 | காக்கி பாலியஸ்டர் சட்டை | **139.65** ஒரு மீட்டர் | **153.00** ஒரு மீட்டர் | - |
| 2 | காக்கி பாலியஸ்டர் கால்சட்டை | **139.65** ஒரு மீட்டர் | **153.00** ஒரு மீட்டர் | - |
| 3 | துண்டு | **134.40** ஒன்றின் விலை | - | - |
| 4 | ஜாக்கெட்டுடன் கூடிய நீல நிற கறை வைத்த புடவை | - | **422.00** ஒன்றின் விலை | - |
| 5 | ஆண்கள் காலணி | - | - | **262.50** ஒரு ஜோடி |
| 6 | பெண்கள் காலணி | - | - | **210.00** ஒரு ஜோடி |

மேலே கண்ட நிறுவனத்தார் சமர்ப்பித்த மாதிரிகள் மற்றும் விலைப்புள்ளிகளின் அடிப்படையில் அதற்கான உத்தேச செலவினம் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோ ஆப் டெக்ஸ் நிறுவனம்**

| துணி வகை | பணியாளர் களின் எண்ணிக்கை | ஒரு நபருக்கு தேவை யான அளவு | மொத்த துணி | விலை மீட்டருக்கு ரூபாய் | மொத்த விலை ரூபாய் |
|---|---|---|---|---|---|
| காக்கி பாலியஸ்டர் சட்டை & பேண்ட் | 1543 | 3.25 மீட்டர் | 5014.75 மீட்டர்கள் | 139.65 | 7,00,310.00 |
| துண்டுகள் (தலைப் பாகை) | 2397 | ஒரு துண்டு | 2397 துண்டுகள் | 134.40 | 3,22,157.00 |
| மொத்தம் ரூபாய் | | | | | 10,22,467.00 |

**என்.டி.சி நிறுவனம்**

| துணி வகை | பணியாளர் களின் எண்ணிக்கை | ஒரு நபருக்கு தேவை யான அளவு | மொத்த துணி | ஒரு சேலையின் விலை | மொத்த விலை ரூபாய் |
|---|---|---|---|---|---|
| ஜாக்கெட்டுடன் கூடிய நீல நிற கறை வைத்த புடவை | 854 | ஒரு சேலை | 854 சேலைகள் | 422.00 | 3,60,388.00 |
| மொத்தம் ரூபாய் | | | | | 3,60,388.00 |

**காதி நிறுவனத்தார்**

| வகை | பணியாளர்க ளின் எண்ணிக்கை | ஒரு நபருக்கு தேவை யான அளவு | மொத்தம் | விலை | மொத்த விலை |
|---|---|---|---|---|---|
| ஆண்கள் காலணி | 1543 | 1 ஜோடி | 1543 | 262.50 | 4,05,038.00 |
| பெண்கள் காலணி | 854 | 1 ஜோடி | 854 | 210.00 | 1,79,340.00 |
| மொத்தவிலை ரூபாய் | | | | | 5,84,378.00 |

ஆக மொத்தம் சீருடைகள் - ரூ. 13,82,855.00
காலணிகள் - ரூ. 5,84,378.00
-------------------------
ரூ. 19,67,233.00
-------------------------

மேலும் ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு ஜோடி சீருடைக்கு தையற்கூலி ரூ. 450/- மற்றும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு ஜாக்கெட் தைக்க ரூ. 100/- –ம் வழங்கப்படுகிறது. (வருடத்திற்கு இரண்டு முறை) அதன்படி இவ்வாண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு முதற்கட்டமாக வழங்கப்படும் சீருடைகளுக்கான தையற்கூலி

ஆண் துப்புரவு பணியாளர்கள் 1543 x 450 = 6,94,350.00
பெண் துப்புரவு பணியாளர்கள் 854 x 100 = 85,400.00
-------------------
மொத்தம் ரூ. 7,79,750.00

ஆக மொத்தம் 19,67,233/- + 7,79,750/- = 27,46,983/- செலவில் தி.ள். கோஆப்டெக்ஸ் நிறுவனத்தார், தி.ள். என்.டி.சி நிறுவனத்தார் மற்றும் தி/ள். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் (காதி கிராப்ட்) ஆகிய அரசுத்துறை நிறுவனங்களிடம் 2019-20-ம் ஆண்டிற்கு தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு முதற்கட்டமாக ஒரு செட் சீருடை, காலணிகள் மற்றும் தையற்கூலி தொகையையும் வழங்கவும் மேலும் இரண்டாம் கட்டமாக பொங்கல் பண்டிகையின் போது மேற்படி நிறுவனத்தார்களிடம் சீருடைகளை இதே விலைப்புள்ளிகளின் அடிப்படையில் வாங்கி வழங்கவும், சீருடைகளுக்காக வழங்கப்படும் தையற்கூலி தொகையை அந்தந்த மண்டல உதவி ஆணையர்களின் கணக்கில் செலுத்தி துப்புரவு பணியாளர்களுக்கு அவரவர் வங்கிக் கணக்கில் ECS–ல் செலுத்தக்கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 7070/2019/எம்.இ.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 153 நாள் 28.08.2019**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள்: கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் – குத்தகை இனமான செட்டிபாளையம் ரோடு மாடு அறுவை மனை பொதுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி – தொடர்பாக.

பார்வை 1: **28.06.2019 –ம் தேதிய மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி.**

பார்வை 2: ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.**31.07.2019**

******

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனமான செட்டிபாளையம் ரோடு மாடு அறுவை மனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை **2019–2020**ஆம் ஆண்டிற்கு உரிமம் ஒப்படைப்பு செய்ய பொதுமின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி **28.06.2019**ம் தேதியில் நடைபெற்றது. இதில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மட்டும் ஏல வைப்புத்தொகைகள் செலுத்த ஏலத்தில் கலந்து கொண்டனர்.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | M.முகமதுரபீக்<br>s/o முகம்மது உசேன் | ரூ.**7,12,500/–** |
| 2 | T.ஜக்குதீன்<br>s/o | ரூ.**6,66,666/–** |

மேற்படி குத்தகை இனத்திற்கு அரசுமதிப்பாக ரூ.**6,00,000/–** நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி ஒப்பந்த புள்ளியில் திரு.முகமதுரபீக் s/o முகம்மது உசேன் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.**7,12,500/–** க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேற்படி தொகையானது அரசமதிப்பானரூ.**6,00,000/–** காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி ஏல இனத்தின் உரிமத்தினை உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு **01.07.2019** முதல் **31.03.2020** வரை ஒதுக்கீடு செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி மாமன்றப் பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.**1152/2018**/அ**1**(தெ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 154 நாள் 28.08.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட **2019–2022–** ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்களில் கீழ்குறிப்பிட்டுள்ள இனங்கள் நாடாளுமன்ற தேர்தல் காரணமாக ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய மூன்றுமாதங்களுக்கு முந்தைய ஏலதாரர்களுக்கு **2018–19**ல் ஆண்டு உரிமத் தொகையில் **5%** உயர்வு செய்து காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஏல இனங்களுக்கு பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி **28.06.2019–**ம் தேதியில் நடைபெற்றது. இதில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரப்படி ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

இனம்: சுந்தராபுரம் தக்காளி மார்கெட் கட்டண கழிப்பிடம் அரசுமதிப்பு : **ரூ.**2,76,673 /–

| வ.எண் | ஏலதாரர்பெயர் | ஏலத்தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | H. மன்சூர் அலி | – | 2,55,000/– |
| 2 | M.அன்புராஜ் | – | 2,81,000/– |

மேற்படி ஏலதாரர்களில் திரு.M. அன்புராஜ் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.**2,81,000/–** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேற்படி ஏல தொகையானது அரசுமதிப்பினை காட்டிலும் கூடுதலாக உள்ளது.

இனம்: செட்டி வீதி கட்டண கழிப்பிடம் அரசுமதிப்பு : **ரூ.3,92,782 /–**

| வ.எண் | ஏலதாரர்பெயர் | ஏலத்தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | H. மன்சூர் அலி | – | 3,75,000 /– |
| 2 | R.கல்பனா | – | 4,02,000 /– |
| 2 | M.அன்புராஜ் | – | 3,70,000 /– |

மேற்படி ஏலதாரர்களில் திருமதி. R.கல்பனா என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.4,02,000/– ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேற்படி ஏல தொகையானது அரசுமதிப்பினை காட்டிலும் கூடுதலாக உள்ளது.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஏல இனங்களும் அரசுமதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.4,02,000/– க்கு ஏலம் கோரப்பட்டுள்ளது. மேற்படி ஏலத்தொகையினை ஏற்று உரிமங்களை 01.07.2019 முதல் 31.03.2020 வரை ஒப்படை செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி மாமன்றப் பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.577/2018/அ1(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 155 நாள் 28.08.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 16**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பொள்ளாச்சி பிரதான சாலையில் ஆத்து பாலம் சந்திப்பு முதல் சுந்தராபுரம் ஆனந்தாஸ் உணவகம் வரை சாலையின் மைய தடுப்பு மற்றும் பக்கவாட்டு பகுதியில் 8 மீட்டர் உயரம் கொண்ட தெருவிளக்கு கம்பம் அமைத்து தெருவிளக்கு பொருத்துதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.49,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 7577/2019/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 156 நாள் 28.08.2019**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 17**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பொள்ளாச்சி பிரதான சாலையில் சுந்தராபுரம் சந்திப்பு முதல் ஈச்சனாரி ஆலயம் வரை சாலையின் மைய தடுப்பு பகுதியில் 8 மீட்டர் உயரம் கொண்ட தெருவிளக்கு கம்பம் அமைத்து தெருவிளக்கு பொருத்துதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.89,50,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 7576/2019/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 157 நாள் 28.08.2019**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 18**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்:35,36க்கு உட்பட்ட சித்ரா சந்திப்பு முதல் வடக்காக செல்லும் காளப்பட்டி பிரதான சாலையில் நேரு நகர் வரை உள்ள பகுதியில் போதிய தெருவிளக்குகள் இல்லை.இச்சாலை பிரதான சாலையாக உள்ளதாலும் இச்சாலையில் நெடுஞ்சாலைத்துறை மூலம் மையதடுப்பு திட்டுகள் அமைக்கப்பட்டு உள்ளதால் இரவு நேரங்களில் போதிய வெளிச்சம் இல்லாமல் உள்ளது.இதனை தவிர்க்கும் பொருட்டு மையதிட்டு பகுதியில் கம்பத்துடன் கூடிய தெருவிளக்குகள் அமைக்கலாம்.தற்பொழுது அவினாசி சாலையில் நெடுஞ்சாலைத்துறை மூலம் மேம்பாலம் கட்டும் பணிகள் தொடங்கப்பட உள்ளதால்.இச்சாலையில் உள்ள மையதிட்டில் கம்பத்துடன் கூடிய தெருவிளக்குகள் சித்ரா சந்திப்பு முதல் காளப்பட்டி பிரதான சாலையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.எனவே மேம்பால பணி மேற்கொள்ளும் பொழுது அவினாசி சாலையில் தெருவிளக்குகள்,கம்பங்களை அகற்றவும்,அவ்வாறு அகற்றப்படும் கம்பங்களில்(60 எண்ணிக்கைகள்) சித்ரா-காளப்பட்டி பிரதான சாலையில் புதிதாக 120W தெருவிளக்குகள் அமைக்க தேவையான பணிகளை மேற்கொள்ள மதீப்பீடு ரூ.25.20 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 7959/2019/MD3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 158 நாள் 28.08.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதி மேம்படுத்த **2019–20** ஆண்டிற்கு தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதிசேவை லிமிடெட் (TUFIDCO) நிறுவனத்திடமிருந்து ரூ.**83.00** இலட்சம் மதிப்பீட்டில் நிதி உதவி பெற்று பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மண்டலம் | பணியின் பெயர் | மொத்த மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | தெற்கு மண்டலம் வார்டு எண் 85 | செல்வபுரம் மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் பணி | **49.00** |
| 2 | தெற்கு மண்டலம் வார்டு எண் 88 | குனியமுத்தூர் ரைஸ் மில் ரோடு மாநகராட்சி பள்ளியில் கழிப்பறைகள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் திரும்ப கட்டுதல் பணி | **19.00** |
